பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
*அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்*



**Pandian Tamil Journal of Temple Studies**
***A Peer-Reviewed Journal***
**Volume 1, Special Issue 1, January 2022** **E-ISSN: 2583-0880**

# Ayya Vaikundar's Tribulations and Reforms

**Dr P.M. Jayakala,** Assistant Professor, Department of Tamil,
S.T. Hindu College, Nagercoil-2, Tamil Nadu, India.
**ORCiD**: **https://orcid.org/0000-0002-0736-0047**
**DOI: 10.5281/zenodo.6433241**

## Abstract

*Kanyakumari district, the southernmost part of India, was under the rule of Travancore. The rulers of the country at that time divided the people into two sections, the upper caste people and the lower caste people and persecuted the lower caste people. The lower castes were affected by the atrocities such as untouchability, denial of entry to the temple, tax evasion, riot, slavery, and servitude. One of those who fought for them at the time was Ayya Vaikundar, who was imprisoned and tortured. He was made to drink poisoned milk, sealed in an airtight room, put into the fire, suffering from stuffing roasted pepper in the water and fire and caged with the tiger. Thus, the king of Travancore inflicted many hardships to Ayya Vaikundar. He also made many reforms for the people. Together with his disciples he broke the untouchability of eating at the house of the carpenter. He set up places of worship called Patis for the worship of the lower caste people. He created light worship as an alternative to idolatry. He created great morale among the people about their rights. He gave the right to make turbans tax free to the lower castes. Thus the devotees who worship him wear turbans. He installed shadow buffers (Nilal Thangal) to educate the lower castes. Vaikuntha died of natural causes in 1851 after suffering many hardships from the upper castes. He worked for the welfare of the lower caste people till his last breath. Even today people worship him as an incarnation of Lord Tirumal.*

**Keywords:** Ayya Vaikundar, Kezhchathi, Patikal, Nizhaltankal, Talaippakai, Cirtiruttappanikal, Innalkal.

## References

[1] Ra. Arigopalan Seedar. *Akilathiratu Ammanai*. Thenthamaraikulam, 1939.
[2] Vivekananthan, N. *Akilattirattu Ammanai*. Vivekanantha Patippagam, Nagercoil, 2003.
[3] Thi. Balasundaram. *Akilathirattu Urainadai*. Samithoopu, 2013.
[4] Pa. Sangumannan. *Arul Nool*. Samithoopu, Kumari Mavattam - 629704.
[5] Vivekananthan, N. *Arulnool.* Vivekanantha Patippagam, Nagercoil, 2004.
[6] Sukumaran, K. *Serarvaralarum makkal Vazhviyalum*. Santhini Pathippakam, Nagercoil, 2005.
[7] Petter, I.V. Petter, D. *Samayatthondarkalum Samuthaya Marumalarschium.* Kanniyakumari Valarschi Aaevumantam, Nagercoil, 1999.
[8] Shanmugam, R. *Nadar Kulatthil Narayanar Avatharam.* Nadar Kula Theepam Patippagam, Karangkadu, 2001.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil

**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
*அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்*



**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*
**Volume 1, Special Issue 1, January 2022** **E-ISSN: 2583-0880**

# அய்யா வைகுண்டர் அடைந்த இன்னல்களும், சீர்திருத்தப் பணிகளும்

**முனைவர் பா. ம ஜெயகலா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தெ.தி இந்துக்கல்லூரி, நாகர்கோவில்-2, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD**: https://orcid.org/0000-0002-0736-0047
**DOI: 10.5281/zenodo.6433241**

**ஆய்வுச்சுருக்கம்**

இந்தியாவின் தென்கோடிப் பகுதியான கன்னியாகுமரி மாவட்டம் 1956 ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாளுக்கு முன்னர்வரை திருவிதாங்கூர் அரசாட்சிக்கு உட்பட்டிருந்தது. அக்காலத்தில் நாட்டை ஆண்டவர்கள் மக்களை உயர்சாதி மக்கள், கீழ்ச்சாதி மக்கள் என இருபிரிவுகளாகப் பிரித்து கீழ்ச்சாதி மக்களைத் துன்பப்படுத்தினார்கள். தீண்டாமை, ஆலய நுழைவு மறுப்பு, வரிக்கொடுமை, தோள்சீலைக்கலகம், அடிமைமுறை, ஊழியம் என்பன போன்ற கொடுமைகளால் கீழ்ச்சாதி மக்கள் அல்லல்பட்டனர். அவர்களுக்காகப் போராடியவர்களில் ஒருவர் 'அய்யா வைகுண்டர்'. இதனால் இவர் சிறையில் அடைத்து கொடுமைப் படுத்தப்பட்டார். அவரை நஞ்சுப்பால் அருந்த வைத்தனர். காற்றே புகாத அறையில் அடைத்து வைத்தனர். நெருப்பினுள் போட்டனர். நீற்றறையிலும், வற்றல் மிளகு தீயினுள் அடைத்தும் துன்பப்படுத்தினர். புலியுடன் கூண்டில் அடைத்து வைத்தனர். இவ்வாறு திருவிதாங்கூர் மன்னனால் பல இன்னல்களை அனுபவித்தார். இவர் மக்களுக்காகப் பல சீர்த்திருத்தங்களையும் செய்தார். தன் சீடர்களுடன் சென்று சவரத் தொழிலாளருடைய வீட்டில் உணவு அருந்தி தீண்டாமையைத் தகர்த்தெறிந்தார். கீழ்ச்சாதி மக்கள் வழிபடுவதற்காகப் 'பதிகள்' எனப்படும் வழிப்பாட்டுத் தலங்களை அமைத்தார். உருவ வழிபாடடிற்கு மாற்றான ஒளி வழிபாட்டைத் தோற்றுவித்தார். மக்களிடையே தங்களின் உரிமையைப் பெறும் மனவுறுதியை ஏற்படுத்தினார். வரியின்றி தலைப்பாகைக் கட்டும் உரிமையைக் கீழ்ச்சாதி மக்களுக்குப் பெற்றுக் கொடுத்தார். இதனால் இவரை வழிபடும் பக்தர்கள் தலைப்பாகை அணிந்து வழிபடுகின்றனர். நிழல் தாங்கல்கள் நிறுவி அதன் மூலம் கல்வி கற்கச் செய்தார். உயர்ச்சாதியினரால் பல இன்னல்களை அனுபவித்த வைகுண்டர் 1851-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். தனது இறுதி மூச்சுவரை கீழ்ச்சாதி மக்களின் நலனுக்காக உழைத்தார். இன்றும் மக்கள் அவரைத் திருமாலின் அவதாரமாக எண்ணி வழிபட்டு வருகின்றனர்.

**திறவுச்சொற்கள்:** அய்யா வைகுண்டர், கீழ்ச்சாதி, பதிகள், நிழல்தாங்கல், தலைப்பாகை, சீர்திருத்தப்பணிகள், இன்னல்கள்.

Volume 1, Special Issue 1, January 2022 E-ISSN: 2583-0880

**முன்னுரை**

திருவிதாங்கூரில் மன்னராட்சியின் போது கீழ்ச்சாதி மக்களை உயர்சாதியினர் மிகவும் கொடுமைப்படுத்தியுள்ளனர். அப்போது கீழ்சாதி மக்களின் இன்னல்களைப் போக்கப் பல போராடினார்கள். அவர்களில் ஒருவரே வைகுண்டர். அவர்; அடைந்த இன்னல்களையும் மக்களுக்காக ஆற்றிய சீர்திருத்தப் பணிகளையும் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**அய்யா வைகுண்டர்**

திருவிதாங்கூரில் வாழ்ந்த கீழ்ச்சாதி மக்களுக்காகப் போராடியவர்களில் ஒருவரான அய்யா வைகுண்டர் பல சீர்திருத்தங்களைச் செய்துள்ளார். 1808ஆம் ஆண்டு மார்ச் மாதம் இரண்டாம் நாள் கன்னியாகுமரியின் அருகாமையில் அமைந்த சாஸ்தான்கோவில் விளையில் பூவண்டர்தோப்பில், பொன்னு, வெயிலாள் தம்பதிகளுக்கு மகவாகப் பிறந்தவர். பூவண்டர்தோப்பு தற்போது “சாமிதோப்பு” என்று அழைக்கப்படுகிறது. பெற்றோர் சூட்டியப்பெயர் “முடிசூடும்பெருமாள்” என்பதாகும். உயர்சாதியினரின் எதிர்ப்பால் தம் பெயரை “முத்துக்குட்டி” என்று மாற்றிக்கொண்டார். சுய விருப்பத்தின்படி பெயர் வைத்துக் கொள்ள முடியாத காலக்கட்டத்தில் (கு.சுகுமாறன்:277). வைகுண்டர் அவதரித்துள்ளார். இளமைப்பருவம் முதலே பொதுத்தொண்டில் ஆர்வம் காட்டிய இவர் புரட்சிகரமான செயல்களிலும் ஈடுபட்டார். விதவை மறுமணம் என்பது கனவில் கூட நினைத்துப் பார்க்க இயலாத காரியமாய் இருந்த காலகட்டத்தில் தன்னைவிட வயதில் கூடிய ஓர் இளம் விதவையை மணந்தார். (ஐ.வி. பீட்டர், டீ. பீட்டர் : 132) இச்செயல் இவர் தம் புரட்சிகரமான எண்ணங்களைத் தெளிவுப்படுத்தியது. இந்து சமயத்தொண்டர்களில் ஒருவரான வைகுண்டர், உயர்சாதியினரின் தலைமையைத் தோல்வியடையச் செய்யவும், மக்களிடையே சமத்துவத்தை நிலை நாட்டவும், கீழ்ச்சாதியினரை ஒன்றுப்படுத்தி அணிவகுத்தும் நிறுத்தினார். அன்றைய சூழ்நிலையில் அடிமையாக வாழ்ந்து வந்த மக்களின் விடுதலைக்காகப் பாடுபடுவதே அய்யா வைகுண்டரின் குறிக்கோளாக இருந்தது.

**அய்யா வைகுண்டரின் இன்னல்கள்**

சாதி இரண்டொழிய வேறில்லை என ஒப்புக்குச் சொன்னாலும் ஆதிகாலம் முதலே சாதி வேற்றுமைகளும், கொடுமைகளும் நிலவி வருகின்றன. அய்யா வைகுண்டர் வாழ்ந்த காலகட்டமானது திருவிதாங்கூர் அரசு வருணாசிரமக் கொள்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆட்சி செய்து வந்த காலமாகும். உயர் சாதியினராகக் கருதப்பட்ட பிராமணர்கள், நம்பூதிரிகள், நாயர்கள், வேளாளர்கள் என்போர் கீழ்ச்சாதி மக்களை மிகவும் கொடுமைப்படுத்தினார்கள். கடுமையான துன்பங்களை அனுபவித்த கீழ்ச்சாதி மக்களுக்காக ரிங்கல்தௌபே, சார்லஸ்மீட்டும் இவரது துணைவியாரும், மால்ட் ஐயரும் அவரது துணைவியாரும், மெக்காலே, மன்றோ, சார்லஸ்மில்லர் ஐயர் இவர்களுடன் மேலும் பல

Volume 1, Special Issue 1, January 2022 E-ISSN: 2583-0880

கிறிஸ்துவ அருட்தொண்டர்களும், அய்யா வைகுண்டர் நாராயணகுரு போன்ற இந்துச் சமயத்தொண்டர்களும் போராடினார்கள். பலரின் உயிரைப் பருகிய இப்போராட்டமானது 1956-ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் நாள் முடிவிற்கு வந்ததால் கீழ்ச்சாதியினர் தாங்கள் அனுபவித்து கொடுமையிலிருந்தும், அடிமை வாழ்விலிருந்தும் விடுதலை பெற்றார்கள். இம்மக்கள் வாழ்ந்த இடம் இன்றைய தமிழ்நாட்டின் மாவட்டங்களில் ஒன்றான கன்னியாகுமரியாகும். அய்யா வைகுண்டர் வாழ்ந்த காலகட்டமானது உயர்சாதியினரின் தீண்டாமை, ஆலய நுழைவு மறுப்பு, வரிக்கொடுமை, தோள்சீலைக் கலகம், அடிமை முறை, ஊழியம் போன்ற கொடுமைகளால் கீழ்ச்சாதியினர் அல்லல்பட்டக் காலகட்டமாகும்.

நாட்டின் விடுதலைக்காகவும், கீழ்சாதியினரின் மேன்மைக்காகவும், பெண்களின் உரிமைக்காகவும் போராடிய அம்பேத்கார், பாரதியார் போன்ற மகான்களும் பல கொடுமைகளுக்கு ஆளாகியே நன்மையை நிலைநாட்டினர். தென் திருவிதாங்கூரில் வாழ்ந்த கீழ்சாதி மக்களின் நலனுக்காகப் போராடிய அய்யா வைகுண்டரும் இதற்கு விதிவிலக்கு இல்லை.

**சிறை**

சிறை என்பது குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனைக் கொடுக்கும் இடமாகும். கீழ்ச்சாதி மக்களின் நன்மைக்காகப் போராடிய வைகுண்டரும் சிறைவாசம் அடைந்துள்ளார். திருவிதாங்கூர் மன்னராட்சியில் அய்யா வைகுண்டர், உடன்குடி என்ற ஊரிலுள்ள ஒரு சிறு குளத்தில் கால், முகம் கழுவியதற்காக மூன்றே முக்கால் மாதம் சிறையில் அடைக்கப்பட்டார். இத்தகைய சிறிய செயலுக்கே தண்டனை கொடுமையாக இருந்தால் அக்காலத்தில் வழக்கில் இருந்த தண்டனைகளின் வன்மையை நம்மால் உணரமுடிகின்றது.

கலியரசனின் கொடுமையைக் கண்ட வைகுண்டர் அவனுக்குப் பல அறிவுரைகளைக் கூறினார். அவரின் அறிவுரைகளைப் பிடிக்காத கலியரசன் அவரைச் சிறையில் அடைக்கும்படி ஆணையிட்டார். அவரை அடைத்த சிறையின் தன்மையை,

**அய்யோ மாயவரை அடைத்து வைத்தே இருந்த**
**பொய்யோ புரைக்குள் பொறுக்குமோ கண்கண்டால்**
**மோள் குழியில் மொகமொக எனவே புழுக்கள்**
**தோள் வழிப்புழுக்கள் தூணி மிகச் சொரியும்**
**அட்டை மிதக்கும் அரிய தேள் ஈ மிதக்கும்**
**விட்ட நரகும் மிகுவாய்ப் புழு மிதக்கும்**
**நாற்றத் துறைகள் நரகத் துறை போல**
**பார்த்த இடமெல்லாம் பல புழுக்களும் சொரிய (நா. விவேகனந்தன்: 3295-3302)**

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 1, Special Issue 1, January 2022 E-ISSN: 2583-0880

இவ்வரிகள் எடுத்துரைக்கின்றன. வைகுண்டரை அடைத்த சிறையானது கழிப்பிடமாகக் காணப்பட்டது. அங்கே அட்டைகளும், புழுக்களும், ஈக்களும் ஏராளமாக இருந்தன. மக்களின் ஆதரவைப் பெற்ற இவருக்கு இந்நிலைமை என்றால் மற்றவர்களின் நிலைமை இதை விட கொடுமையாக இருந்தது.

**நஞ்சு உணவு**

சிறையிலிருந்து வெளியே வந்த அய்யா வைகுண்டர் மீண்டும் கீழ்ச்சாதியினரின் உயர்வுக்காகப் போராடியுள்ளார். இதை விரும்பாத திருவிதாங்கூர் மகாராஜா அய்யா வைகுண்டரை அழிக்க எண்ணியதை,

**பச்சைநாவியைப் போட்டுப் பால் என்று கொண்டுதர**
**பாலாய் இருந்தது அய்யோ சிவனே அய்யா (நா. விவேகானந்தன் : 40)**

இவ்வடிகள் பகர்கின்றன. காவலர் மூலம் கொடிய விஷம் கலந்த பாலைக் குடிக்க வைத்ததை இவ்வரிகள் உணர்த்துகின்றன. கொடிய நஞ்சு என்பதை அறிந்த அய்யா வைகுண்டர் எவ்வித பதட்டமோ, பயமோ இன்றி, பாலை அருந்தினார். இதனால் அவருக்கு எந்தத் தீங்கும் நேரவில்லை.

**அறையில் அடைத்தல்**

நஞ்சு உணவு திட்டத்திற்குப் பின் மன்னன் சுவாதி திருநாள், அதிகாரிகளை அழைத்து காலம் கடத்தாமல் அந்தச் சாணான் சாமியைக் காற்றே வராத ஒரு அறைக்குள் வைத்துப் பூட்டுங்கள் என்றார் (ஷண்முகம் :133). மன்னனின் மனவன்மையை இது பிரதிபலிக்கின்றன. உடனே காவலர்கள் அய்யா வைகுண்டரை, சிறிய துவாரம் கூட இல்லாத அறையில் வைத்துப் பூட்டியதை,

**கொடும்பாவி என்னையும் புழுகணி அறையிலே**
**கொண்டுபோய் அடைத்தானே சிவனே அய்யா (நா. விவேகானந்தன் : 40)**

என்னும் வரிகள் தெளிவுறுத்துகின்றன. சிறிய அறையிலே சுவாசம் விடமுடியாமல் இறந்திருப்பார் என்று நினைத்து இரு தினங்கள் கழித்து அறையைத் திறந்தனர். அப்போது எல்வித துன்பமுமின்றி இன்முகத்துடன் அய்யா வைகுண்டர் அந்த அறையில் காணப்பட்டார். இதனால் மன்னரின் கோபம் மேலும் அதிகமாயிற்று.

**நெருப்பிலிடுதல்**

காற்றுப்புகாத அறையில் அடைத்தும் அய்யா வைகுண்டருக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாததால் அவரை அழிக்க நெருப்பில் போட்டதை,

**நெய்யூற்றிக் கட்டை அடுக்கி தீயை வைத்து நீ**
**நீந்திக் கொடு என்றானே சிவனே அய்யா**
**குளியாத மேனியில் குளிக்க நாள் ஆச்சுது என்று**

Volume 1, Special Issue 1, January 2022 E-ISSN: 2583-0880

**குளிபோட்டு நீந்தினேன் அய்யோ சிவனே அய்யா (நா. விவேகானந்தன் : 24)**

இவ்வரிகள் கூறுகின்றன. காவலாளர்களிடம், ஆழக்குழி தோண்டச் சொல்லி அதில் கட்டைகளை அடுக்கி, தீமூட்டி அதில் நெய்யையும் ஊற்றியதால் ஜுவாலையானது கொழுந்து விட்டு எறிந்தது. அப்போது காவலர்கள் மன்னனின் ஆணைப்படி அவரைக் குழியில் தூக்கிப் போட்டனர். நீரூற்றில் இறங்கி நிம்மதியாய் நீந்திக் குளித்துக் கரையேறுவது போல் அய்யா வைகுண்டர் கரையேறினார். கோபம் கொண்ட மன்னன் எவ்வாறாயினும் அய்யா வைகுண்டரைக் கொன்று விட வேண்டும் என்று முழு மூச்சில் இறங்கினார்.

**நீற்றறையில் இடுதல்**

தீயில் போட்ட பின்பும் அய்யா வைகுண்டருக்கு எந்தத் தீங்கும் ஏற்படாததால் அவரை நீற்றறையில் போட எண்ணினார். ஒரு அறையில் சுண்ணாம்புக் கற்களைக் கொட்டி, அதனுள் அய்யா வைகுண்டரை வைத்து நீற்றி விடுங்கள் என்று காவலாளர்களுக்கு மன்னர் உத்தரவுப் பிறப்பித்தார், நீற்றறையில் இட்டதை,

**நீற்றுக்கல் கொண்டு வந்து நீற்றிப்போட வேணும் என்று**
**நீசனும் செய்தானே (நா. விவேகானந்தன் : 42)**

என்னும் வரிகள் மூலம் அறியலாம். காவலர்கள், இவரைச் சுண்ணாம்பு கற்கள் நிறைந்த நீற்றறையில் வைத்துப் புட்டி, சுண்ணாம்பு கற்கள் மீது நீருற்றினர். சுண்ணாம்போடு சுண்ணாம்பாய் வெந்து நீறாகி இறந்து இருப்பார் என்ற நம்பிக்கையோடு வெகுநேரம் கழித்து திறந்துப் பார்த்த போது, அய்யா வைகுண்டர் பன்னீர் தடாகத்தில் மூழ்கி வருவது போல் முன்னை விட அதிக பொலிவோடு அறையை விட்டு வெளியே வந்தார். சுண்ணாம்பு நீற்றும்போது நம் கை தெரியாமல் பட்டு விட்டால் பட்ட இடம் வெந்து விடும். ஆனால் சுண்ணாம்பின்னுள் முழுவதுமாக மூழ்கியும் அய்யா வைகுண்டருக்கோ எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. பல இன்னல்களைச் செய்தும் எந்தக் கவலையும் அடையாமல் இருக்கின்ற அய்யா வைகுண்டரைப் பார்த்து மன்னனும் காவலர்களும் மிகுந்த கோபம் கொண்டனர்.

**வற்றல் மிளகு தீயினுள் வாசம்**

இயற்கையின் சீற்றமான காற்று, தீ, தண்ணீர், நிலநடுக்கம், பூகம்பம் போன்றவற்றிலிருந்து யாராலும் தப்ப இயலாது. ஆனால் அய்யா வைகுண்டர் நீற்றறையிலிருந்தும் எந்தப் பாதிப்பும் இல்லாமல் வெளியே வந்ததால் அடுத்த கட்டமாக அவருக்கு அளித்த தண்டனையை,

**அரங்கு அதனில் அடைத்து வத்தல் போடத் தீ வைத்தும்**
**அசையாமல் இருந்தேன் அய்யோ சிவனே அய்யா (நா. விவேகானந்தன் : 42)**

என்ற வரிகள் விளக்குகின்றன. அறையொன்றிலிட்டு அதில் மூடை மூடையாய் வற்றல் மிளகாயைக் கொட்டி நெய்யூற்றி, வாயிற்கதவைப் பூட்டி தீ வைத்தனர். அந்த தீ ஜுவாலை

Volume 1, Special Issue 1, January 2022 E-ISSN: 2583-0880

அடங்கிய பின் அறையைத் திறந்தனர். அப்போது அவர் எந்தத் துன்பமும் இன்றி வெளியே வந்தார். எந்த வழியிலாவது அழிக்க திட்டமிட்டவர்கள் அடுத்த சதி திட்டத்தைத் தீட்டினார்கள்.

**புலிக்கூண்டில் அடைத்தல்**

மன்னரின் எந்தச் சூழ்ச்சியாலும் அழிக்க முடியாத அய்யா வைகுண்டரை அடுத்த சூழ்ச்சியாக மிகக் கொடூரமான முறையில் கொலைச் செய்ய எண்ணியுள்ளனர். எனவே காட்டில் திரிந்த புலியைக் கூண்டில் அடைத்து, அதனுடன் அய்யா வைகுண்டரையும் அடைத்தனர்.

**இட்டமாய்ப் பெட்டகத்தில் ஒட்டகையை நிறுத்தி,**
**என்னையும் அடைத்தானே சிவனே அய்யா**
**வதை செய்ய விட்ட புலி அதிசயப் பட்டு என்னை**
**வணங்கியும் நின்றது அய்யோ சிவனே அய்யா (நா. விவேகானந்தன் : 42)**

இவ்வரிகள் இதனை உறுதி செய்கின்றன. ஆனால் பாய்ந்து வந்து புலியோ அய்யா வைகுண்டரின் பாதமருகில் வந்து எதையோ மோப்பம் பிடிப்பது போன்று முகந்துப் பார்த்து விட்டு சுற்றி சுற்றி வந்தது. பின்னர் அய்யா வைகுண்டரின் முன் படுத்துக்கொண்டது. எந்தச் சதியாலும் அழிக்க முடியாததால் மன்னன் அய்யா வைகுண்டரின் பாதத்தில் வீழ்ந்து வணங்கி மன்னிப்பு கேட்டார்.

**அய்யா வைகுண்டரின் சீர்திருத்தங்கள் :**

அய்யா வைகுண்டர் தீண்டாமை என்று சொல்லக்கூடிய அறியாமைப்பேயை அடியோடு அகற்றி நல்வழி ஏற்படுத்தினார். இவர் தனது சீடர்களுடன் சென்று ஒரு சவரத் தொழிலாளருடைய வீட்டில் உணவு உட்கொண்டு தீண்டாமையைத் தகர்ந்தெறிந்தார். தீண்டாமைக் கொடுமையை அகற்ற சாமித்தோப்பு பகுதியில் முந்திரிக்கிணற்றை அமைத்தார். இக்கிணற்றில் அனைத்து மக்களும் சாதி பேதமின்றி குளித்து, நீரருந்த ஏற்பாடு செய்து மக்களிடம் ஒற்றுமையை வளர்த்தார். சமபந்தி போஜனத்தை நடத்தி தீண்டாமையை அகற்றினார். அய்யா வைகுண்டர் தன்னைப் பார்க்க வருபவர்களிடம் அரிசி, காய்கறிகள் கொண்டு வரச்செய்து முந்திரிக்கிணற்று நீரைக் கொண்டு சமையல் செய்து அவர்களுடன் அமர்ந்து தானும் உணவருந்தினார்.

அய்யா வைகுண்டர் உயர்சாதி இந்துக்களின் கோவில்களில் நுழைவதற்கும், வழிபாடுசெய்வதற்கும் கீழ்ச்சாதி மக்களுக்கு உரிமை மறுக்கப்பட்டிருந்த போது, மக்கள் உரிமையுடன் இறைவனை வழிபடுவதற்கெனப் “பதிகள்” எனப்படும் வழிபாட்டுத் தலங்களை உருவாக்கினார். சாமிதோப்பு பதி, அம்பலபதி, முட்டப்பதி, தாமரைக்குளம்பதி, பூப்பதி என்னும் ஐந்து பதிகளை நிறுவி, புரட்சிகரமான வழிபாட்டு முறையைக் கையாண்டார். அதில் அர்த்தமற்ற ஆசாரங்களுக்கும், சடங்குகளுக்கும் இடமளிக்காமல் கண்ணாடியின் முன்னே ஒரு

Volume 1, Special Issue 1, January 2022 E-ISSN: 2583-0880

விளக்குச்சுடரை அமைத்தார். ஆக, உருவ வழிபாட்டிற்கு மாற்றான ஒளி வழிபாட்டை மக்களிடையே அய்யா வைகுண்டர் அறிமுகப்படுத்தினார்.

அய்யா வைகுண்டர், கீழ்ச்சாதி மக்களில் பலர் கிறிஸ்தவச் சமயத்திற்கு மாறிக் கொண்டிருந்த வேளையில், தங்கள் சமயத்திலிருந்து கொண்டே தங்கள் உரிமைகளைப் பெறுவதற்குப் போராடும் மனஉறுதியை ஏற்படுத்தினார். அவர், அநியாய வரிகளைக் கொடுக்க வேண்டாமென்றும், ஊழியவேலைகளைச் செய்ய வேண்டாமென்றும் கூறினார். கீழ்ச்சாதி மக்களின் தலையில் வரியின்றி தலைப்பாகைக் கட்டிக் கொள்ள வைத்ததோடு, தன்னைப் பார்க்க வருபவர்கள் கட்டாயமாகத் தலைப்பாகை அணியவேண்டும் என வலியுறுத்தினார். இக்காரணத்தால் இன்றும் அவரது பக்தர்கள் தலைப்பாகை அணிந்து வழிப்பட்டு செல்கிறார்கள். பிராமணப் பூசாரிகளால் எறிந்துக் கொடுக்கப்படும் விபூதியும், சந்தணமும், நிவேத்தியப் பொருட்களும், மக்கள் தொலைவில் நின்றே வாங்கி வந்தனர். வைகுண்டர் இவ்வழக்கத்தை மாற்றினார். விபூதி நாமங்களைக் கைவிரல்களால் நெற்றியில் தொட்டுப் பூசிக் கொடுக்கும் படிச் செய்தார். கீழ்ச்சாதி குழந்தைகள் முதல் முதியவர்கள் வரையிலான அனைவரும் கல்வி பயிலவேண்டும் என்பதற்காக ஊர்கள்தோறும் நிழல்தாங்கல் நிறுவி அவற்றின் மூலம் கல்வியைப் புகட்டினார். தென்திருவிதாங்கூரில் செட்டிக்குடியிருப்பு, அகஸ்தீஸ்வரம், வண்ணான்விளை, வட்டக்கரை என்ற கிராமங்களிலும், திருநெல்வேலி மாவட்டத்தின் வடலிவிளை, பாஞ்சாலங்குறிச்சி, பாம்பன்குளம், கடம்பன்குளம் ஆகிய கிராமங்களிலும் அய்யா வைகுண்டர் நேரில் சென்று நிழல் தாங்கல்களை நிறுவினார்.

அய்யா வைகுண்டர் ஜாதி சமய வெறிகளைக் களையும் பொருட்டு, சமதர்மக் காலனி ஒன்றை முட்டப்பதியில் நிறுவினார். இதன் மூலம் அவரின் சாதி சமயமற்ற மனப்பான்மையை அறிய முடிகின்றது. அன்புக்கொடி இயக்கம், துவயல்பந்தி இவற்றால் இவரின் சீர்திருத்தங்களை நாம் அறியலாம். திருவிதாங்கூரில் காணப்பட்ட கொடிய பழக்க வழக்கத்திலிருந்து மக்களைக் காப்பாற்றிட கீழ்ச்சாதியினருடன் இணைந்துப் போராடினார். பல இன்னல்களுக்கு ஆளாகி, சோதனைகளை எல்லாம் சாதனையாக்கி, வெற்றி பெற்றதால், அவரின் புகழ் இன்றும் ஒளர்விடுகின்றது. இந்துமத மக்கள் அவரைத் திருமாலின் அவதாரமாக எண்ணி வழிபட்டு வருகின்றனர். இவ்வாறு புரட்சிகரமான செயல்களில் ஈடுபட்டதாலும், கீழ்ச்சாதி மக்கள் உயர்சாதியினரையும், அரசையும், பழைய சமூகப் பழக்கவழக்கங்களையும் எதிர்த்துப் போராடத் தூண்டினதாலும் அரசு அதிகாரிகள் அவர் மீது குற்றம் சுமத்தி சிறையில் அடைத்துச் சித்ரவதைச் செய்துக் கொடுமைப்படுத்தினர்.

**முடிவுரை**

மனிதன் விலங்குகளை விட கேவலமாக நடத்தப்பட்ட காட்டு மிராண்டிக் காலத்தில் அய்யா வைகுண்டர் வாழ்ந்திருக்கிறார். இவர் வாழ்ந்த காலகட்டமானது அரசாங்கத்தாலும்,

உயர்சாதியினராலும் கீழ்ச்சாதியினர் சீரழிக்கப்பட்ட காலகட்டமாகும். தீண்டாமைக் கொடுமை, ஆலய நுழைவு மறுப்பு, அநியாயவரி, ஆடைமுறை, அடிமைமுறை, ஊழியம் போன்ற கொடுமைகளை எதிர்த்துப் போராடி கீழ்ச்சாதியினருக்கு வெற்றியை வாங்கித் தந்து அவர்கள் மனநிம்மதியோடு வாழ வழிசெய்துள்ளார். கீழ்ச்சாதி மக்களின் நலனுக்காகப் பல இன்னல்களை அனுபவித்துள்ளார். 1851-ஆம் ஆண்டு இயற்கையெய்திய அவர் தனது இறுதி மூச்சுவரைச் சமுதாய நலன் காக்க அயராது பணியாற்றியுள்ளார்.

**துணைநூற்பட்டியல்**

[1] இரா. அரிகோபாலன் சீடர். *அகிலத்திரட்டு அம்மானை.* தென்தாமரைக்குளம், 1939.

[2] விவேகானந்தன், நா. *அகிலத்திரட்டு அம்மானை.* விவேகானந்தா பதிப்பகம், நாகர்கோவில், 2003.

[3] தி. பாலசுந்தரம். *அகிலத்திரட்டு உரைநடை.* சாமிதோப்பு, 2013.

[4] பா. சங்குமன்னன். *அருள்நூல்.* சாமிதோப்பு, குமரி மாவட்டம் – 629704.

[5] விவேகானந்தன், நா. *அருள்நூல்.* விவேகானந்தா பதிப்பகம், நாகர்கோவில், 2004.

[6] சுகுமாறன், கு. *சேரர்வரலாறும் மக்கள் வாழ்வியலும்.* சாந்தினிபதிப்பகம், நாகர்கோவில், 2005.

[7] பீட்டர், ஐ.வி. பீட்டர், டி. *சமயத்தொண்டர்களும் சமுதாய மறுமலர்ச்சியும்.* கன்னியாகுமரி வளர்ச்சி ஆய்வுமன்றம், நாகர்கோவில், 1999.

[8] ஷண்முகம், இரா. *நாடார் குலத்தில் நாராயணர் அவதாரம்.* நாடார் குலதீபம் பதிப்பகம், காரங்காடு, 2001.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி**: இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.